உ

சிவமயம்



# அருள்மிகு
# பாலை மரத்தடி முத்துமாரி அம்மன் ஆலயம்
# புதிய கொலனி, மாங்குளம்

## தேர்மலர்

23.03.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## மாங்குளம், யாழ் வீதி, புதியகொலனி
## திருவருள்மிகு பாலை மரத்தடி
## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்

# தேர்மலர்

# 23.03.2023

ஈழவூர் சைவப்புலவர், கலாபூசணம்
சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம்
சிவாச்சாரியர் M.A. Jp

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

ஈழமணித்திரு நாட்டின் வடமாகாணம் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய கொலனி, மாங்குளம் பதியில் பாலை மரத்தடியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் அன்னை முத்துமாரி அம்பிகைக்கு புதிய சித்திரத்தேர் அமைத்து அரும்பணியாற்றியது அறிந்தேன் ஆனந்தம் அடைகின்றேன். திருமதி. வீரக்கொடி நாகம்மா அவர்களின் பக்தி வைராக்கியம் இன்று இம்மாபெரும் திருப்பணியை நிறைவாக்கியுள்ளது. அம்மா அவர்கள் காலம் வாழ்க்கையின் பொற்காலம் எனலாம். மண்ணில் பிறந்த எல்லோரும் இவ்வகை பணி செய்வதில்லை ஒரு சிலருக்கு மட்டுமே இப்பணி கிடைக்கின்றது. இதேபோன்று சிவஸ்ரீ வேல், பொன்னுத்துரை சாந்தகுமார் (சாந்தன்) ஐயா அவர்களின் எண்ணம் முழுமை பெற அம்மாவின் திருவருள் கைகூடியமை இன்றியமையாதது. இவ்வரிய கைங்கரியம் மானிடப்பிறப்பின் பெரும் பணியாக அமைகின்றது. இவ்வகையாக அமைந்த இச்சிவப்பணியை பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன் ஆசி கூறுகின்றேன். எல்லோருக்கும் எல்லா நலமும் நிறைவாக கிடைக்கப் பிரார்த்தனை செய்கின்றேன்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றும் அறியேன் பராபரமே

- தாயுமானவர்

**கிரியா வித்தக மாமணி**
**சிவஸ்ரீ ஜெக. ஜெயந்தக்குருக்கள்,**
**அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான பிரதமகுரு,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

பாலை மரத்தடியில் அருள் வாக்குச் சொல்லும் அம்மா, அவர்களின் முன், அன்னை முத்துமாரி அம்பிகை திருவருள் என்னை இப்பணிக்கு ஆட்கொண்டமைந்தமைதான் இச் சிவப்பணிக்கு காரணமாக அமைந்தது. அனையின் அருள்வாக்குப் பெற்றவர்கள் எல்லோரும் அன்னைமுத்துமாரித் தாயின் அரவணைப்புப் பெற்றார்கள் என்பது உறுதியானது. எனது முன்வினையும் எனது மூதாதயர் செய்த தவப் பயன் காரணமாகவும் இத் திருப்பணி செயற்பட காரணமாக அமைந்தமை உணர முடிகின்றது. அன்னை முத்துமாரி அம்பிகை அருள் அனைவரும் பெற்று உய்வடைய வேண்டும் என அம்பிகை அருட்பாதம் பணிந்து வேண்டுகின்றேன்.

**ஆதீன கர்த்தா, பாண லிங்கேஸ்வரம்,**
**சிவஸ்ரீ வேல்.பொன்னுத்துரை சாந்தகுமார் ஐயா குடும்பத்தினர்,**
**அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் சிவன் கோயில் ஒட்டாங்குளம்,**
**துணுக்காய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

## ஓம் சக்தி சர்வசக்தி மகாசக்தி

பராசக்தி, அகிலாண்டநாயகி அன்னை முத்தமாரி அம்பாளின் பாதம் பணிந்து இறைஞ்சுகின்றேன்.

எனது மூதாதயர் வழிபடும் குல தெய்வமாக அமையப் பெற்றவள் அன்னை முத்துமாரி அம்பிகை. புதிய கொலனி மாங்குளம் வந்து குடியேறி அன்னையை பாலை மரத்தடியில் வழிபாடு செய்து, சிறுகுடிசை அமைத்து வழிபாடு செய்து, ஆலயம் அமைத்து வழிபாடு செய்து வந்தோம். திருவிழாக்கள் நிறைவாக அமைய அன்னை அருளுக்கும், ஆட்சிக்கும் உட்பட்ட அடியார்கள் தொண்டர்கள், அரும்பெரும் திருப்பணியார்கள் காரணமாகின்றார்கள். சுபகிருது வருடத்தில் தம்பி சாந்தன் அவர்கள் உள்ளத்தில் பக்தி வைராக்கியம் கொண்ட அருள் மூச்சு இன்று சித்திரத்தேர், தேர்மூட்டி, தேர்வீதிகள் என்று அருட்பணிகள் பல புரிய வைத்துள்ளது. அம்பாளின் அருட் கடாட்சம் அவர்கள் குடும்பத்தாருக்கும் ஏனைய அடியார்கட்கும் எல்லோர்கும் நிறைவாகக் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

எங்கும் நிறைந்த சக்தி, ஏகாந்தமான சக்தி, அருள் ஒளி அருளும் சக்தி, அடியாரை அரவணைக்கும் முத்துமாரி அம்பிகையின் அருட் சக்தி என்றுணர்ந்து வாழ்த்தி அமைகின்றேன்.

**ஆலய தர்மகர்த்தா**
**திருமதி. வீரக்கொடி நாகம்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## அன்பும் அருளும் ஆசியும் கிடைப்பதாகுக

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திரு வார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே - திருமந்திரம்

கலியுகம் நடைபெறும் காலம், இவ்வுலகம் மிக மிக வேகமாக வீறு நடைபோடுகின்றது. எல்லாச் செயல்களுக்கும் நாம் பலனை எதிர்பார்க்கின்றோம்.

"என் கடன் பணி செய்வதே - அப்பர்வாக்கு
"பொன்றும் மெயப்பொருளும் தருபவன்"
பிறைசூடும் பெருமான் - சிவன் மட்டுமே
அர்ச்சனைப் பாட்டே பாட்டாகும் மண்மேல் செற்றமிழ் பாடுக" என்று கேட்டுப்பெற்றவை திருமுறைகள்.

இத் திருமுறைகள் சைவ ஆலயங்களில் விழாக்காலங்களில், ஓதவேண்டியவை, அவ்விடங்கள், இராகம், தாளம், தோத்திரங்கள் பண்கள் என எம் முன்னோர்களும் வகுத்துள்ளனர். இவையாவும் மனிதன் மனிதனாக வாழ வழிசமைக்கும் வழிகாட்டுதல்களேயாம். இவற்றுக்கு அமைய "தேர் மலர்" என்றும் இச் சிறுகைநூல் அனைவரும் நாள்தோறும் பாராயணம் பணினால் இப்புவியில் சிறப்புற வாழலாம் நாள்தோறும் பல்லாண்டு ஓதுவது மனமாற்றம் உண்டாகும், தீவினை அகலும், மங்கலம் உண்டாகும். நாள்தோறும் ஓதமுடியாதவர்கள் விழாக்காலங்களில் ஓதி இன்புறுவார்களாக. சிவப்பணி, இறைபணி, நற்பணி, திருப்பணி, அறப்பணி என்பவை ஆன்மார்த்தமானவை. தேர், தேர்முட்டி, தேர்வீதிகள் என அரும் பெரும் திருப்பணி ஆற்றிய சிவ அன்பர் சிவஸ்ரீ வேல்.பொன்னுத்துரை சாந்தகுமார் ஐயா அவர்களின் அர்ப்பணிப்பான திருப்பணிகள் மென்மேலும் வளர முத்துமாரி அம்பாள் அருள்புரிய பிரார்த்திக்கின்றேன்.

"கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டாவிடல்" இவ்வழி அனை வோரும் வாழ்வோமாக

**தொகுப்பு:**
**ஈழஉஊர் சைவப்புலவர், கலாபூசணம்**
**சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியர் M.A. Jp**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கதவம் திறக்கும் திருப்பாடல்

**மஹா கும்பாபிஷேகம் நிறைவுபெற்றதும்**
**தச தர்சனத்தின்போது பாடப்படுவது.**

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது.
திருச்சிற்றம்பலம்.

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணினார்வலம் செய்ம்மறைக் காடரோ
கண்ணினாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே

ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேஅருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட இக்கத வம்திறப் பிம்மினே

அரிய நான்மறை ஓதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழல் ஏத்தரோ
வலையில் மாமணி வண்ண உருவரோ
தொலைவி லாக்கத வம்துணை நீக்குமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கும் தாழை புறணி யருகெலாம்
ஆக்கும் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்கும் காண்பரியீர் அடிகேள் உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே

வெந்த வெண்பொடி பூசும் விகிர்தரோ
அந்த மில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த சூழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே

சுண்ண வெண்பொடி பூசும் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி அணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணுளார் வணங்கும் மறைக் காடரோ
கண்ணினாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே

அரக்கனை விரலா லடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானீரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவ காலத் திருமுறைகள்

## மஹோற்சவத்தின்போது
## தம்பத்தடியில் ஓதப்படவேண்டிய திருமுறைகள்

### கணபதி தாளம்

பண் : தக்காரகம் இராகம் : காம்போதி

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவ மென்கோலோ - சம்பந்தர்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க,
சுடர்ச்சடை சுற்றி முடித்து,
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ,
ஆரிடமும் பலி தேர்வர்,
அணிவளர் கோலம் எலாம் செய்து,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ, மங்கையை வாட
மயல் செய்வதோ, இவர்மாண்பே? - சம்பந்தர்

மாந்தர் தம் பானறு நெய்மகிழ்ந் தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழ றாளமொர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தார் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்
சதுர் செய்வதோ விவர் சார்வே. - சம்பந்தர்

மத்தம் மதயானை யின்வெண் மருப்புந்தி
முத்தங் கொணர்ந்தெற்றி யோர் பெண்ணைவடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தாவுனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே - சம்பந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூஷிக தாளம் – விநாயகருக்கு
## விருஷப தாளம் – சிவன், அம்பாள்

பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

இடரினும் தளரினு மெனதுறு நோய்
தொடரினு முனகழல் தொழு தெழுவேன்
கடல்தனி லமுதோடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே.
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. - சம்பந்தர்

துஞ்சலும் துஞ்சல் இல்லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்சு எழுத்துமே. - சம்பந்தர்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. - சம்பந்தர்

பிழைத்த பிழையொன் றறியேனான் பிழையைத்தீரப் பணியாயே
மழைக்கண்நல்லார் குடைந்தாட மலையுநிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங் சுழனிமண்டிக் கையேறி
அழைக்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ.
- சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிம்ம தாளம் – அம்பாள்

பண் : நட்டபாடை இராகம் : கம்பீரநாட்டை

மையாடிய கண்டன்மலை மகள் பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய ஒருவன்
செய்யாடிய குவளைம் மலர் நயனத் தவனோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மெனீரே - சம்பந்தர்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவ னன்றே
- சம்பந்தர்

நந்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டவர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீர்ச்சரத்தானே - சம்பந்தர்

அங்கம்மொழி அன்னாரவ ரமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்நகரில்
பஞ்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே - சம்பந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயூர தாளம் – முருகன்

**பண் : இந்தளம்  இராகம் : மாயாமாளவகெளளை**

விண்ணிலான பிறைசூடுவர் தாழ்ந்து விளங்கவே
கண்ணினால் தங்கன்னுடலம் பொடியாக்கினார்
பண்ணி லானவிசை பாடன்மல் குந்திருவாஞ்சியத்
தண்ணலார் தம்மடிபோற்ற வல்லார்க்கில்லை யல்லலே
- சம்பந்தர்

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணான்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ ரெய்தின தாமே - அப்பர்

தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே
சடைமேற் கங்கை வெள்ளம் தரித்த தென்னே
அலைக்கும் புலித்தோல் கொண்டசைத்த தென்னே
அதன்மேற் கதநாகங்கச் சார்த்த தென்னே
மலைக்கு நிகர் ஒப் பனவன் திரைகள்
வலித்தெற் றீமுழங் கிவலம் புரிகொண்
டலைக்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே - சுந்தரர்

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே. - சம்பந்தர்

பித்தாப்பிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லே னெனலாமே. - சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிக்கவி

## கொடியேற்றத்திற்கு ஆயத்தமானதும் பாடப்படுவது

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே யிடம்ஒன்று மேவிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராதுள் ளுயிர்க்குயிராம்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கும் உயிர் அருள் கூடும் படிக்கொடி கட்டினனே

பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் வெளியேது இரவேது - அருளாளா
நீபுரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி

- உமாபதி சிவாச்சாரியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவசந்திகளில் ஓதவேண்டிய தேவாரப் பண்கள்

## பிரம்ம சந்தி

பண் - மேகராகக்குறிஞ்சி இராகம் - நீலாம்பரி

அன்னமலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம் பெருமானை அந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையால் இவைபத்தும் இசையுங்கால் ஈசனடி ஏத்துவார்கள்
தன்னிசையோடு அமருலகில் தவநெறிசென றெய்துவார் தாழாதன்றே

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோல மாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர் சடை அண்ணலே. - சம்பந்தர்

செல்வ மல்கிய செல்வர் பராய்த்துறைச்
செல்வர் மேற்சிதை யாதன
செல்வன் ஞானசம் பந்தன் செந்தமிழ்
செல்வமாய் இவை செப்பவே. - சம்பந்தர்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான் அமரும்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவை யாறே
- சம்பந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திர சந்தி (கிழக்கு)

பண் - காந்தாரம் இராகம் - நவரோஸ்

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசைகெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆலவாயான் திருநீறே

- சம்பந்தர்

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்த் திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முர ணேறும் அகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை

- அப்பர்

மறைகளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாம்
துறையுந் தோத்திரத்திறையும் தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனலானைக் காவுடை யாதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே.

- சுந்தரர்

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனு அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

- அப்பர்

மாதர்ப்பிறைக் கண்ணி யானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறி யாதன கண்டேன்.

- அப்பர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கினி சந்தி (தென்கிழக்கு)

பண் - கொல்லி　　　　　　　　　　இராகம் - நவரோஸ்

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடு
பந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே

- சம்பந்தர்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர்குறைவு இல்லை
கண்ணில் நல்ல.ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

- சம்பந்தர்

கூற்றாயின வாறு விலக் ககிலீர்
　　கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
　　பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
　　குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
　　வீரட்டானத் துறை அம்மானே　　　　- அப்பர்

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
　　சார்பினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் படாதே யெந்தை
　　புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறுங் கூறையும்
　　ஏத்தலா மிடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள் வதற்
　　கியாதும் ஐயுற வில்லையே　　　　- சுந்தரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யமசந்தி (தெற்கு)

பண் - கௌசிகம் இராகம் - பைரவி

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே - சம்பந்தர்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே. - சம்பந்தர்

குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூல் கருத்தும்நீ அருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மவே - அப்பர்

இயமன் தூதரு மஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாமம் நமச்சி வாயவே. - சம்பந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிருதிசந்தி (தென்மேற்கு)

பண் - நட்டபாடை இராகம் - கம்பீரநாட்டை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவ னன்றே

- சம்பந்தர்

வெம்புந்திய கதிரோன்ஒளி விலகும் விரி சாரல்
அம்புந்திமூ எயிலெய்தவன் அண்ணாமலை யாதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர் காழியுள் ஞான
சம்பந்தன் தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே. - சம்பந்தர்

பண்ணின் தமிழிசை பாடலின் பழவேய் முழவதிரக்
கண்ணின் ஒளிகனகச் சுனை வயிரமவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள் மணிவாரிக் கொண்டேறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கோதார மெனீரே. - சுந்தரர்

உண்ணாமலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

- சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருணசந்தி (மேற்கு)

பண் - சீகாமரம் இராகம் - நாதநாமக்கிரியை

மட்டிட்ட புன்னயைங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணோதே போதியோ பூம்பாவாய்

சம்பந்தர்

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய்

சம்பந்தர்

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம் போகீர்என்றானே

சுந்தரர்

கண் காட்டும் நுதலானும்
கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும்
பிறை காட்டும் சடையானும்
பண் காட்டும் இசையானும்
பயிர் காட்டும் புயலானும்
வெண் காட்டில் உறைவானும்
விடைகாட்டும் கொடியானே

சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயுசந்தி (வடமேற்கு)

பண் - தக்கேசி இராகம் - காம்போதி

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரி தோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவென நின்று
பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநக ராரே

சம்பந்தர்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே

சுந்தரர்

ஆலம்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே

சுந்தரர்

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவி தொறுவின் னிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையும் சாரல் அண்ணா மலையாரே

சம்பந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குபேர சந்தி (வடக்கு)

பண் - தக்கராகம் இராகம் - காம்போதி

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப்
பூதகணம் புடை சூழக்
கொடியுடை யூர் திரிந்து ஐயம்
கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள்நெடுங் கண்உமை பாகம்
ஆயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக்
கறைமிடற் றானடி காண்போம்

சம்பந்தர்

செருமேவு சலந்தரனைப் பிளந்தசுடர் ஆழி
செங்கண்மலர்ப் பங்கயமாகச் சிறந்தானுக் கருளி
இருள்மேவும் அந்தகன்மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள்முரித்த இறையவன் ஊர்வினவில்
பெருமேதை மறையொலியும் பேரிமுழவு ஒலியும்
பிள்ளையினற் துள்ளிவிளை யாட்டொலியும் பெருகக்
கருமேதி புனல்மண்டக் கயல்மண்டக் கமலங்
களிவண்டின் கணம்இரியும் கலயநல்லூர் காணே

சுந்தரர்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க
சுடர்ச்சடை சுற்றி முடித்து
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலம் எலாம் செய்து
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ, மங்கையை வாட
மயல் செய்வதோ, இவர்மாண்பே?

சம்பந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசான் சந்தி (வடகிழக்கு)

பண் - சாலாபாணி (பதிலாக - சாதாரி) இராகம் - பந்துவராளி

பாடன்மறை சூடான்மதி பால்வளையொர்
பாகமதின் முன்றொர் கணையால்
கூடவெரி யூட்டியெழில் காட்டி நிழல்
கூட்டு பொழில் சூழ்பழைசையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர
மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே

சம்பந்தர்

திடமலி மதிலணி சிறுகுடி மேவிய
படமலி அரவுடை யீரே
படமலி அரவுடை யீர்உமைப்பணிபவர்
அடைவதும் அமருலகதுவே

அப்பர்

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்

அப்பர்

எந்தமது சிந்தை பிரியாத பெருமா னெனஇறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்ய வளர் தூபமொடு தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர் கின்றஅழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்டை நகரே

சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

## இரதோற்சவத்தின் போது

**தேர் புறப்பட ஆயத்தமாகியதும் பாடப்படுவது.**

சேந்தனார் அருளியது.
திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியேமுக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும்உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

நிட்டையி லாவுடல் நீத்தென்னைஆண்ட
நிகரில்லா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்(து)
அட்ட முர்த்திக்கென் அகம்நெகஊறும்
அமிர்தினுக்(கு) ஆழம்நிழற்
பட்டனுக்(கு) என்னைத் தன் பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாண்டசுரு திப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

புரந்தரன் மாலயன் பூசலிட்(டு)ஓலமிட்(டு)
இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்ப என்னுயிராண்ட கோவினுக்
கென்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பகனாகிக்
கரையில் கருணைக் கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பில்லாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால்
எங்குந்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதை என்ஆர்வத் தனத்தினை
அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

சீரும் திருவும் பொலியச்சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில
ஊரும் உலகுங் கழறஉழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலுங் கயலுந் திழைக்குங் கண்ணார்இளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா தெறிதந்து
வந்தென் மனத்தக்கத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டிஅழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள்செய்தவன்
மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

தாதையைத் தாள் அற வீசிய
சண்டிக்கு மண்டத் தொடும் உடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்
கோவிலும் போனகமும் அருளிச்
சோதி மணி முடித்தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்குங் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழியாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்
தாண்டு கொண்டாருயிர் மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே என்று
பல்லாண்டு கூறுதுமே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாணிக்கவாசக சுவாமிகளால்
## தில்லையில் அருளிச் செய்யப்பட்ட
# திருப்பொற் சுண்ணம்

(ஆனந்தமனோலயம்)

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ்சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவாகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்த்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப
ஆர்ப்பபாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப்பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ(டு)
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க ளாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போத்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

தொல்லை யிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தி

"அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே"

- திருமூலர் திருமந்திரம்

சிலாத முனிவர் - சாரு லட்சனை தம்பதிக்கு நெடுங்காலமாக புத்திர பாக்கியம் கிட்டவில்லை. அதனால் சிவபெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்தார் சிலாதர். அவரது தவத்துக்கு இரங்கிய சிவபெருமான் மழலை வரம் அருளினார். இறை அருளால் பிறந்த பிள்ளைக்கு நந்தி எனப் பெயர் சூட்டி வளர்த்தனர்.

ஆனாலும் மகன் பிறந்த மகிழ்ச்சியை அத் தம்பதியர் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. ஏனெனில் பிள்ளைக்கு ஆயுள் எட்டு வருடங்கள்தான் என்ற நிபந்தனை விதித்திருந்தார் சிவபெருமான்.

அந்தக்காலம் நெருங்க நெருங்க பெற்றோரின் கவலை அதிகரித்தது. இதை உணர்ந்த சிறுவனான நந்தி காரணம் கேட்க, வேறு வழியின்றி உண்மையைக் கூறினர். "கவலை வேண்டாம்" என்று அவர்களை ஆறுதல் படுத்திய நந்தி, தனியே சென்று சிவனைக் குறித்து தவம் மேற்கொண்டான். சிவனருளால் பூரண ஆயுள் பலமும், கயிலைக்கே காவலனாகும் பேறும் பெற்றான். அதனால் அதிகார நந்தி எனப் பெயரும் பெற்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நந்தி தத்துவம்

நந்தியின் நிறம் வெள்ளை, வெண்மை தூய்மையைக் குறிப்பது. அறமாகிய தர்மத்தின் நிறமும் வெண்மையே, நந்தி தூய்மையும் ஆண்மையும் நிறைந்தது. ஆக, தர்மதேவதையே சிவபெருமானின் வாகனமாக அமைந்துள்ளது. சிவபெருமானின் வாகனமும் கொடியும் ரிஷபமே (காளை).

தருமதேவதை, சிவபெருமானிடம் தன்னை வாகனமாக ஏற்கும்படி கூறியது. அவ்வேண்டுகோளுக்கு இணங்க சிவபெருமான், ஒவ்வொரு யுகத்திலும் நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்ற பாதங்களால் நீ நடக்க வேண்டும். நானே உனக்கு உயிராய் இருந்து உன்னை நடத்துவதால் நம்மை வணங்குவோர் செய்யும் பாவங்கள் கூட அறமாக மாறும் என்று வரமருளினார் சிவபெருமான்.

சிவாலயங்களில் உள்ள நந்திதேவர் மூன்று கால்களை மடக்கி ஒரு காலை மட்டும் நிமிர்த்தியுள்ளதை நாம் காண முடியும். கலியுகத்தில் ஒரு காலால் நடக்க வேண்டும் என்ற சிவபெருமானின் ஆணைக்கேற்பவே அவ்வாறு உள்ளது.

## நந்தி வழிபாட்டுக்கான கிழமைப்பலன்

பிரதோஷ தின நந்தி வழிபாட்டில் ஒவ்வொரு கிழமைக்கும் ஒவ்வொரு பலன் உண்டு.

ஞாயிறு - சுப மங்களத்தைத் தரும்.
திங்கள் - சோம சூத்ர பிரதட்சிணநாள். நல்ல சிந்தனைகள் தரும். பல அசுவமேத யாகங்கள் செய்த பலன்கிட்டும்.
செவ்வாய்- வறுமை விலகும்.
புதன் - புத்திரப்பேறு கிட்டும். கல்வி கேள்விகளில் திறமை வலுப்பெறும்.
வியாழன் - குருவருளோடு, இறை அருள் கிடைக்க பித்ருக்கள் உதவுவர். அனைத்து ஆபத்தும் விலகிப் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி - எதிர்ப்புகள் நீங்கும். எதிரிகள் வலுயிழப்பார்கள்.
சனி - மகா பிரதோஷ நாள். பதவி உயர்வு வரும். அஷ்ட லக்ஷ்மிகளின் பரிபூரண ஆசி கிடைக்கும்.

## பிரதோஷ அபிஷேகப் பொருட்களும் அவற்றின் நன்மைகளும்

| | |
|---|---|
| தண்ணீர் | - மனத்தூய்மை |
| மஞ்சள் | - வசீகரம், மங்கலம், நல்லநட்பு பெருகும். |
| பச்சரிசி | |
| மாவுப்பொடி | - கடன் தீரும், குபேரசம்பத்து உண்டாகும். |
| பால் | - ஆயுள் விருத்தி |
| தயிர் | - குழந்தை பாக்கியம், உடல் வலு |
| பஞ்சாமிர்தம் | - நீண்ட ஆயுள், உடல் பலம், வெற்றி. |
| நெய் | - சுக வாழ்வு |
| தேன் | - சூரலினிமை |
| நல்லெண்ணெய் | - பக்தி, சுகம், நலம் பெருகும். |
| கரும்புச்சாறு | - தோஷம், பிணி நீங்கும். |
| சர்க்கரை | - பகை, எதிரிகள் ஒழிவர் |
| பழ வகைகள் | - வியாபார முன்னேற்றம் |
| எலுமிச்சை | - மரணபயம் நீங்கும் |
| இளநீர் | - ராஜயோக, நல்ல மக்கட்பேறு |
| அன்னாபிஷேகம் | - அரசுப் பதவிகள் கிட்டும் |
| கற்கண்டு | - ஒற்றுமை ஓங்கும் |
| விபூதி | - சகல ஞானமும் கைகூடும் |
| குங்குமம் | - மங்களம் உண்டாகும். |
| மலர்கள் | - தெய்வ தரிசனம் கிட்டும் |
| பன்னீர் | - சரும நோய்கள் அகலும் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ வழிபாடு

## நந்தீஸ்வரர் பெருமை

நந்திஎம் பெருமான் தன்னை
நாடொறும் வணங்கு வோர்க்குப்
புந்தியில் ஞானம் சேரும்
பொலிவுறு செல்வம் கூடும்
சிந்தையில் அமைதி தோன்றும்!
சிறப்புறு மக்கள் சேர்வர்!
இரந்திர போகம் கிட்டும்!
இணையிலா வாழ்வு தானே!

## நலம் தரும் நந்தி

கந்தனின் தந்தையைத் தான் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குவதற்கு நடையினில் விலகி நின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்க வந்தாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடி வந்தெம்மைக் காப்பாய்
ஒன்பது கோள்களுக்கும் உயரியபலம் கொடுப்பாய்
பொன் பொருள் குவிய வைப்பாய் புகழையும் வளர்த்து வைப்பாய்

சிந்தனை வளம்கொடுப்பாய் சிகரத்தில் தூக்கி வைப்பாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடிவந்தெம்மைக் காப்பாய்
மாலைகள் ஏற்க வைப்பாய் மழலைகள் பிறக்க வைப்பாய்
வேலைகள் கிடைக்கவைப்பாய் விதியையும் மாற்றி வைப்பாய்
சோலையில் வண்ணப் பூவைச் சூடிடும் நந்தி தேவா
நாளும் நான் உனை துதித்தேன் நாடி வந்தெம்மை காப்பாய்

தஞ்சையில் பெரிய நந்தி தளிருடல்வெண்ணெய் சாத்தி
அஞ்சாத வேந்தன் நந்தி அழகிய நெகமம் நந்தி
குஞ்சர வேந்தன் அழகிய நெகமம் நந்தி
குஞ்சர முகத்தான் குந்திடும் ரிஷப நந்தி
தஞ்சமாய் உனையடைந்தேன் தயங்காது எமைக் காப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் சேர்க்கும் நந்தீஸ்வரா

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

செங்கரும்பு உணவு மாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளக்கும் நந்தி
மங்களங்கள் அனைத்தையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர் போக்க வந்த நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

அருகம்புல் மாலையையும் அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வரும் காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தருக்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிவிட விளையும் நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

வேந்தன் நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சையிலே பெரிய நந்தி
சேர்ந்த திருபுன் கூரிலே சாய்ந்த நந்தி
செவி சாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

கும்பிட்ட பக்தர் துயர்நீக்கும் நந்தி
குடம்குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்விக்க எம் இல்லம் வருக நந்தி!
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய

## நாட்டமுள்ள நந்தி

நந்தியிது நந்தியிது நாட்டமுள்ள நந்தியிது
நந்தனுக்கு நலம்புரிந்த நலமான நந்தியிது
செந்தூரப் பொட்டுவைத்து சிலிர்த்துவரும் நந்தியிது
சிந்தையில் நினைப்பவர்க்கு செல்வம்தரும் நந்தியிது (நந்தி)

தில்லையில் நடனமாடும் திவ்யநாதன் நந்தியிது
எல்லையில்லா இன்பம்தரும் எம்பெருமான் நந்தியிது
ஒற்றை மாடோட்டியெனும் உலகநாதன் நந்தியிது
வெற்றிமேல் வெற்றிதரும் வேந்தன்நகர் நந்தியிது (நந்தி)

பச்சைக்கிளி பார்வதியாள் பவனிவரும் நந்தியிது
பார்ப்பவர்க்கு பலன்கொடுக்கும் பட்சமுள்ள நந்தியிது
சங்கம் முழங்கவரும் சங்கரனின் நந்தியிது
எங்கும் புகழ்மணக்கும் எழிலான நந்தியிது (நந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றவன் வளர்த்துவந்த கொடும்பாளூர் நந்தியிது
நற்றவர் பாக்கியத்தால் நமக்குவந்த நந்தியிது
நெய்யிலே குளித்துவரும் நேர்மையுள்ள நந்தியிது
ஈஎறும்பு அணுகாமல் இறைவன்வரும் நந்தியிது (நந்தி)

வானவரும் தானவரும் வணங்குகின்ற நந்தியிது
காணவரும் அடியவர்க்கும் கருணைகாட்டும் நந்தியிது
உலகத்தார் போற்றுகின்ற உத்தமனின் நந்தியிது
நகரத்தை வளர்த்துவரும் நான் மறையின் நந்தியிது (நந்தி)

## நமசிவாய மாலை

ஓம் நமசிவாயஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாயஓம் ஓம் நமசிவாய

ஆதியான அஞ்சிலும் அனாதியான நாவிலும்
சோதியான மூன்றிலும் சொரூபமற்ற ரெண்டிலும்
நீதியான தொன்றிலும் நிறைந்து நின்ற வஸ்துவை
ஆதியான தொன்றுமே யற்றதஞ் செழுத்துமே

சக்தி நீ தயவு நீ தயங்கு சங்கினோசை நீ
சித்தி நீ சிவனும் நீ சிவாய மாமெழுத்து நீ
முத்து நீ முதலும் நீ மூவரான தேவர் நீ
அத்திபுர மும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே

ஆறு நாடு தேடினும் ஆனை சேனைதேடினும்
கோடிவாசி தேடினும் குறுக்கே வந்து நிற்குமோ
ஓடி இட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல் தர்மம் வந்து நிற்குமே

கண்ணிலே இருப்பவனே கருங்கடல் கடந்துமால்
விண்ணில் இருப்பவனே மேவியங்கு நிற்பனே
தன்னுளே இருப்பவனே தராதலம் படைத்தவன்
என்னுளே இருப்பவனே எங்குமாகி நிற்பனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டமேழு முழலவே யனிந்தயோனி யுழலவே
பண்டு மாலயனுடன் பரந்து நின்றுழலவே
எண்டிசை கடந்து நின்றிருண்ட சக்தியுழலவே
அண்டரண்ட மொன்றதாய் ஆதி நடமாடுமே.

## நந்திதேவர் வணக்கம்

**(ஆடுக ஊஞ்சல் ஆடுகவே என்ற மெட்டு)**

வழிவிடு நந்தி வழிவிடுவே
வாழ்வில் நாங்கள் வளர்ந்துயர
வழிவிடு நந்தி வழிவிடுவே
வையகம் வளர வழிவிடுவே (வழிவிடு)

எம்பிரான் சிவனைச் சுமப்பவனே
எல்லா நலனும் தருபவனே
ஏழைகள் வாழ்வில் இருளகல
என்றும் அருளைச் சுரப்பவனே (வழிவிடு)

நீரில் என்றும் குளிப்பவனே
நெய்யில் என்றும் மகிழ்பவனே
பொய்யில்லாத வாழ்வு தர
பொங்கும் கருணை வாரிதியே (வழிவிடு)

உந்தன் கொம்பும் இரண்டிடையே
உமையாள் பாகன் காட்சிதர
தேவர் எல்லாம் அருள் பெற்றார்
தேனாய் இனிக்கும் செய்தி அப்பா (வழிவிடு)

தேடிய பலனைத் தந்திடுவாய்
தேவர் போற்றும் நந்திதேவா
வாழ்வில் வளமே வந்துயர
வழியே காட்டி அமைந்திடுவாய் (வழிவிடு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தனார் போற்றும் நந்தி தேவா
நாலுந் தெரிந்த வல்லவனே
எம்பிரான் அருளை எமக்கருள
என்றுந் துணையாய் நிற்பவனே (வழிவிடு)

பிரதோஷம் என்றால் உன் மகிமை
பெரிதும் வெளியில் தெரிந்திடுமே
தேவர்க்குக் காட்சி உன்மூலம்
தெரிய செய்த பெரியவனே (வழிவிடு)

## நந்திதேவர் துதி

நந்திஎம் பெருமான்தன்னை
வணங்கினால்
புந்தியில் ஞானம் சேரும்
இவ்வுலக இன்பம்யாவும்
அவ்வுலக அருளும்கூட அவர்துதி
முற்பிறவி வினைகள்யாவும்
நந்தியின் பார்வை பட
நந்தியின் எதிர் அமர்ந்து
நந்தீசர் நற்பாதம்
நாள்தோறும் வழிபட்டால்
புகழ் கல்வி தேடிவரும்
இவரடி தொழ உண்டு!
பாட உண்டு!
தீயிட்ட மெழுகாகும்
நலங்கள் உடன் கிட்டும்!
ஈசனுக்கு எதிர் அமர்ந்து இறைஊஞ்சல் ஆட்டுவிக்கும் நாம்
தொழுவோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org